**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2015 P.W.10/L.W.13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயசேகரன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 2011 ம் வருடத்தில் நான் மணவாளக்குறிச்சி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது குற்ற எண் 42/2011 வழக்கினை உதவி ஆய்வாளர் திருமதி. அனிதா அவர்கள் முதல் விசாரணைச் செய்து எனது மேல்விசாரணைக்கு வைத்தார்கள். 23.02.2011 ம்தேதி இவ்வழக்கினை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தைப் பார்வையிட்டேன். ஏற்கனவே உதவி ஆய்வாளர் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததது சரியாக இருந்தபடியால் நான் தனியாக பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை.

2. உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தேன். அவர்களை நான் விசாரித்தபோது சாட்சிகள் முன்பு கூறியதுபோல் என்னிடமும் கூறியதால் நான் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவுச்செய்யவில்லை. இவ்வழக்கில் பிரேத பரிசோதனைச் செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கைப் பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மேற்படி வழக்கு கோப்பில் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையானது காவல்துறையினரால் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையானது காவல்துறை கோப்பிலும் இல்லை என்பது தெரிய வருகிறது. மேற்படி வழக்காவணத்தை சம்மந்தப்பட்ட நிலைய பொறுப்பு அதிகாரி மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பெற்று அதன் நகலானது எதிர்தரப்பினருக்கு**

**கொடுக்கப்பட்டு அதன் பின்னரே வழக்கு விசாரணை தொடருவது உசிதம் என கருதுவதால் மேற்படி முதல் விசாரணையை இந்நீதிமன்றம் இத்துடன் நிறுத்துகிறது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.